07.11.2023
O.S.No.181/2014

வா.சா.1 .திரு.முத்துலிங்கம் த.பெ.ராஜேந்திரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நான் கதவு எண்.2/224 மற்றும் 2/224ஏ-ல் வசித்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், நான் குடியிருந்த வீட்டின் மேற்கோப்பு மோசமான நிலையில் இருந்தததால் இந்த வழக்கின் எதிர்தரப்பினர் அதை இடிக்க சொன்னார்கள், நான் இடித்துக்கொண்டிருந்த போது தாவா தாக்கல் செய்து அந்த வேலை அப்படியே நின்று விட்டது, தற்சமயம் அதில் குடியிருக்க முடியாமல் நான் வேறு வீட்டில் குடியிருந்து வருகிறேன். எந்த வருடம் நான் வீட்டை இடித்தேன் என்றால் சுமார் 3 ஆண்டுகள் இருக்கும், அதற்காகதான் அவர்கள் மற்றொரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனக்கும், மகாலிங்கம் வாரிசுதாரர்களுக்கும் இடையே மேலூர் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண்.76/2014 வழக்கில் நான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருந்ததாக சொல்லவில்லை என்றாலும், வேறு முகவரியில் குடியிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. அசல் வழக்கு எண்.76/2014 வழககில் கட்டுப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் இந்த வழக்கில் கட்டுப்பட்டுள்ள சொத்துக்கள் ஆகியவற்றில் எனது அத்தை பாப்பா என்பவர் 1/4 பாகம் கோரி எனக்கு அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டு அதற்கு பதில் அறிவிப்பு நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பின் அடிப்படையில் எனது அத்தை பாப்பா என்பவர் எங்களுக்கு எதிராக அந்த சொத்துக்ககளில் 1/4 பாகம் கேட்டு அசல் வழக்கு எண்.164/2023 என்ற வழக்கை மேலூர், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் அனைவரும் ஆஜராகாமல் தோன்றாதரப்பினராக ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தாவாவில்தாக்கல் செய்துள்ள எனது தரப்பு வரி ரசீதுகள் எந்த இலக்கத்திற்கு உரியது என்றால் கதவு எண்.2/224, 2/224ஏ ஆகிய வீடுகளுக்கும் எங்களுடைய நஞ்சை நிலங்கள் அனைத்திற்கும் தாக்கல் செய்துள்ளேன்.

3. தாவா இரண்டாம் இலக்க சொத்தான சர்வே எண்.759/30-ல் கட்டுப்பட்டுள்ள ஓட்டுவீட்டிற்கு நான் வரி ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த ஓட்டு வீடு முல்லைச் செல்வனுக்கு பாத்தியப்பட்டது என்பதால் வரி ரசீதை தாக்கல் செய்யவில்லை. தாவா நான்காம் இலக்க சொத்தான சர்வே எண்.297-1ல் கட்டுப்பட்டுள்ள 36 செண்டு நிலத்தில் மேல்புறம் 18 செண்டு புஞ்சைக்கு நான் வரி ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த நிலம் எங்களது தாத்தா பெயரில் இருந்ததால் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி நான்காம் இலக்க சொத்திற்கு நாளதுதேதி வரை நான் வரி எதுவும் கட்டியதில்லை என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்திற்கு மேற்குபுறம் உள்ள செண்ட்ரிங் வீட்டின் கதவு எண்.2/221 என்றால் எனக்கு கதவு எண் சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-17 ஆவணமான முல்லைச்செல்வனுக்கு, முத்தையா எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில்

4வது இலக்க சொத்தாக தாவா 1ம் இலக்கத்தின் மேற்குபுறம் உள்ள சென்ட்ரிங் வீடு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில்அந்த வீட்டின் கதவு எண்.2/221 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள கதவு எண்.2/224ஏ-க்கான வீட்டுவரி ரசீதுகள் தாவா 3ம் இலக்க சொத்துக்குரியது அல்ல என்றால் சரியல்ல. தாவா 2 முதுல் 4 இலக்க சொத்துக்கள் வா.சா.ஆ-17 தான செட்டில்மெண்ட் ஆவணப்படி 1ம் பிரதிவாதி முல்லைச்செல்வனுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், தாவா 3ம் இலக்க சொத்திற்குரிய கதவு எண்.2/221ஏ என்றாலும் சரியல்ல, தாவா 3ம் இலக்க சொத்தில் எனது தந்தை காலத்திலேயே ஓட்டுசாய்பு இருந்தது, அதில் நான் அனுபவித்து வந்தேன், அதற்கு பின்னிட்டுதான் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கதவு எண்.2/221ஏ என்று சொத்தை சேர்த்துள்ளார்கள். வா.சா.ஆ-17 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் படி தாவா 2 முதல் 4 இலக்க சொத்துக்கள் முல்லைச்செல்வனுக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வருகிறார் என்றாலும், அந்த சொத்துக்களுக்கான வரி வகையறாக்களை அவர்தான் செலுத்தி வந்தார் என்றாலும் சரியல்ல, தாவா 2ம் இலக்க சொத்து மட்டும் தான் முலலைச்செல்வனுக்கு பாத்தியப்பட்டது, 3 மற்றும் 4 இலக்க சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது.

5. 3 மற்றும் 4 இலக்க சொத்துக்கள் வா.சா.ஆ-17 தானசெட்டில்மெண்ட் ஆவணப்படி முல்லைச்செல்வனுக்கு பாத்தியப்பட்டது என்ற அடிப்படையில் அவர்தான் வரி வகையறா செலுத்தி வந்து அனுபவித்து வருகிறார் என்றாலும், நான் அந்த சொத்திற்கு அனுபவத்தில் இ ருந்து வரி வகையறா செலுத்தி வந்ததாக சொல்வது இந்த வழக்கிற்காக சொல்லப்படும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல, தற்போது வரை நாங்கள்தான் அனுபவித்து வருகீறோம். வெள்ளலூர் ஊராட்சியில் ஒரு வீட்டிற்கு இரண்டு கதவு எண் கொடுப்பார்களா என்றால் எனக்கு தெரியாது. கதவு எண்.2/224ஏ என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் எனக்கு பாத்தியப்பட்ட வேறு ஏதோ வீட்டிற்குரிய வரி ரசீதை தாவா 3ம் இலக்க சொத்திற்கான வரி ரசீது என பொய்யுரைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.76/2014 வழககு மேலூர் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று கொண்டிருந்த போது ராஜேந்திரன் வாரிசுகளான எங்களுக்குள் அவசர அவசரமாக அந்த வழக்கு சொத்து சம்பந்தமாக ஒரு பாக பிரிவினை பத்திரம் 27.10.2017 அன்று ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் எங்களுக்கு விவசாயத்திற்கு தேவைப்பட்டதால் நாங்கள் ஏற்படுத்திக்கொண்டோம்.

6. அந்த பாகவஸ்தி பத்திரத்தில் தாவா 2 முதல் 4 இலக்க சொத்துக்களை நாங்கள் காட்டவில்லை என்றால் சரிதான், அந்த சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டு விட்டபடியால் எங்களால் அந்த சொத்துக்களை பாகவஸ்தி செய்து கொள்ளமுடியவில்லை. முத்தையா உயிருடன் இருந்த போது வா.சா.ஆ-17 செட்டில்மெண்ட் ஆவணப்படி தாவா 2 முதல் 4 இலக்க சொத்துக்களை 1ம்பிரதிவாதி முல்லைச்செல்வனுக்கு தான

செட்டில்மெண்ட எழுதி வைத்து சுவாதீனத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றாலும் எனக்கு அந்தசொத்துக்களில் சுவாதீனமோ, அனுபவமோ இல்லை என்றாலும் சரியல்ல. எனது தந்தை காலம் தொட்டு தற்போது வரை நாங்கள் தான் அந்த சொத்தை அனுபவித்து வருகிறோம். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள TN 59BS7562 என்ற எண் கொண்ட டிராக்டர் ராஜேந்திரன் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, அவர் இறந்த பின்பு நானும், எனது சகோதரர்கள் இருவரும் சேர்ந்து கூட்டாக 2007ம் ஆண்டு ஒரு டிராக்டர் வாங்கினோம், அது எனது பெயரில்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது, எனது தந்தையின் ஞாபகார்த்தமாக அந்த டிராக்டரில் எனது தந்தை பெயர் எழுதப்பட்டுள்ளது, தற்போது அந்த டிராக்டர்-ஐ மாத்திவிட்டு வேறு டிராக்டர் வாங்கிவிட்டோம், அந்த டிராக்டர் எண் தான் TN 59BS7562. அந்த டிராக்டர் வாங்கி சுமார் 7 ஆண்டுகள் ஆகின்றது.

7. உண்மையிலேயே மேற்சொன்ன டிராக்டர் நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிடசென்ற போது அங்கு இல்லை என்றாலும், நீதிமன்ற ஆணையர் இல்லாத ஒன்றை தனது அறிக்கையில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. 1ம் இலக்க சொத்துக்களுக்குள்ளேயோ, அதற்கு மேற்குபுறமோ வீட்டிற்குள் நுழைந்து அளவீடு எதுவும் செய்யவில்லை என்றால் அளப்பதற்கு பிரச்சினை செய்ததால் அளக்க முடியவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள B E A D சொத்திற்கு நடுப்புறம் உள்ள சுவர் இருவருக்கும் பொதுவான சுவர் என்றால் சரிதான். அதே போல் தாவா 3ம் இலக்க சொத்தான சர்வே எண்.759/38-ல் எந்தெந்த இடம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று சர்வேயர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா 5ம் இலக்க சொத்தான சர்வே எண்.759/45ல் காட்டப்பட்டுள்ள சொத்தை வா.சா.ஆ-17 ஆவணத்தின் மூலம் முத்தையா, முலலைச்செல்வனுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மீது தவறான அபிப்ராயம் ஏற்பட வேண்டும் என்பதால் தான் பிரதிவாதிகளுக்கு சம்பந்தமில்லாத தாவா 5ம் இலக்க சொத்தை தாவாவில் காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. அவர்கள் தற்சமயம் அந்த சொத்திற்கு பட்டா வாங்கியுள்ளார்கள். அதன் பட்டா எண் என்ன என்றால் தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள சர்வேயர் வரைபடத்தில் சர்வே எண்.759/45 சர்க்கார் புறம்போக்கு, நத்தம் காலியிடம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் தற்போது அவர்கள் பட்டா வாங்கிவிட்டார்கள். 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் தாவா 5ம் இலக்க சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சர்க்கார் புறம்போக்கு என்று இருப்பதினால் அதை பொதுமக்கள் பாதையாக பயன்படுத்துவதற்கு தடை ஏதும் இல்லை என்றால் சரிதான், அதை சுற்றி 6 வீடுகள் உள்ளது. அந்த 6 வீட்டை சார்ந்தவர்களும் அந்த இடத்தை பாதையாகதான் பயன்படுத்தி வருகிறார்கள். அரசு புறம்போக்கு நிலத்தை பாதையாகதான் பயன்படுத்த வேண்டும் என்று எனக்கு நிர்பந்தபடுத்த அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல, அதன் வழியாகதான் எங்கள் வீட்டிற்கு செல்லமுடியும், அது பாதையாகதான் உள்ளது. 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் தாவா 5ம் இலக்க

சொத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என 6 முதல் 8 பிரதிவாதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பாதையை ஆக்கிரமிப்பு செய்கிறார்கள் என்று பொதுமக்கள் யாரேனும் அவர்களுக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை.

9. தாவா 2 முதல் 4 இலக்க சொத்துக்களில் வா.சா.ஆ-17 செட்டில்மெண்ட் ஆவணப்படி 1ம் பிரதிவாதி முல்லைச்செல்வனுக்கு பாத்தியப்பட்டு அவர்தான் தற்போது வரை அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும், அந்த சொத்துக்களில் எனக்கு எந்த பாத்தியதையும் கிடையாது என்றாலும் சரியல்ல. முத்தையாவின் சொத்துக்களை பாகம் பிரித்த போது ஏற்பட்ட மனக்கசப்பினால்தான் பொய்யான சங்கதிகளை கொண்டு, தூய கரத்துடன் நீதிமன்றத்தை அனுகாமல் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யாக தாவா தாக்கல் செய்து வீண் வாதம் செய்து வருகிறேன் என்றாலும், தாவாவில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.